# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 37. நடைபாதை விற்பனையாளர்கள்

**விளக்கம்:** நடைபாதை விற்பனையாளர்கள் இலங்கையில் காணமுடிகின்ற பொதுவான ஒரு அம்சமாகும்.. நடைபாதை விற்பனையாளர் என்பவர் நாளாந்த பாவனைகளுக்குத் தேவைப்படும் பொருட்களையோ, உணவுப் பொருட்களையோ அல்லது பண்டங்களையோ அல்லது சேவைகளையோ வீதியில், ஒழுங்கையில், வீதியோரத்தில், நடைவழியில், தெருக்கரையில், பொதுப் பூங்காவில் அல்லது ஏதாவது பொது இடம் ஒன்றில் அல்லது தனியார் இடத்தில் ஒரு தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடத்தில் வைத்தோ அல்லது இடத்திற்கு இடம் நகர்ந்தோ பொதுமக்களுக்கு வழங்கும் ஒருவராவார். நடைபாதை வியாபாரிகளது தராதரங்களை ஆய்வு செய்வதற்கு இலங்கையின் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் ஒரு குழு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என இத்தால் அழுத்தமாகப் பரிந்துரைக்கப்படுகிறது. அத்துடன் ஒவ்வொரு நடைபாதை விற்பனையாளரும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பது குறித்தும் சுகாதார நிலைமைகளைப் பேணுவது குறித்தும் கட்டாயமாக அறிந்துகொள்ளச் செய்ய வேண்டும்.

**பொறுப்பாளர்- நகராட்சி மன்றம் /சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை/ சுகாதாரம்**

- நடைபாதை விற்பனையாளர்கள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கென உள்ளூராட்சி சபைகளில் ஒரு பிரிவினை நிறுவுதல்.
- நடைபாதை விற்பனைசுகாதார சேவையாளர்களுக்கான இடம் (நிலையான) மற்றும் நடமாடும் நடைபாதை விற்பனையாளர்களுக்கான பகுதிகளை ஆய்வு செய்து ஒதுக்குவதற்கு என ஒரு பிரிவினை / ஒரு குழுவினை அமைத்தல்.
- நிலையான நடைபாதை விற்பனையாளர்களுக்கு இடையில் போதுமான இடைவெளி பேணப்படும் வகையில் தேவையான இடம் வழங்கப்படுவதை உறுதி செய்க.
- உள்ளூராட்சி அமைப்புகளில் பதிவு செய்யும் ஒரு முறைமையினை உருவாக்குக- அனைத்து விற்பனையாளர்களினதும் தொடர்பு விபரங்கள்.
- தேவையான முன்னெச்சரிக்கைகள் விற்பனையாளரால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தவும். உதாரணம்: கைச் சுகாதாரம், சுவாச நற்பழக்கங்கள், முகக்கவசம் போன்றவை.
- விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் - வைரஸ் எவ்வாறு பரவுகிறது என்பது குறித்தும் தடுப்பு முறைகள் (உடல் இடைவெளி பேணுதல், சுவாச நற்பழக்கங்கள், முகக்கவசங்களைச் சரியாக அணிவது, கைச் சுகாதாரம்) குறித்தும் விற்பனையாளர்களுக்கு அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.

**விற்பனையாளர்கள்**

- வைரஸ் எவ்வாறு பரவுகிறது என்பது குறித்தும் தடுப்பு முறைகள் குறித்தும் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.
- சகல சந்தர்ப்பங்களிலும் வாடிக்கையாளர்களிடமிருந்து ஒரு மீற்றர் இடைவெளியைப் பேண வேண்டும்.
- முகக்கவசத்தைச் சரியாக அணிய வேண்டும்.
- பணத்தைக் கையாளும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்திருப்பதுடன் சாத்தியமான சந்தர்ப்பங்களில் கைகளைத் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.
- அவர்களது வாகனம் அல்லது அவர்களது சுமைஏந்தி (carrier) யானது தொற்றுநீக்கம் செய்யப்பட வேண்டும்.
- அவர்கள் நோயுற்றால் வீட்டிலேயே இருத்தல் வேண்டும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் பொறுப்பு ஆகும்

அறிவுறுத்தும் முறைகள்

- தகவல் பலகைகள் மற்றும் சுவரொட்டிகள்




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020